# குறிஞ்சிப்பாட்டு எனும் பூக்காட்டில் பீர்க்கம்பூ

ம.ஆன்றிஷா,

*முனைவர் பட்ட ஆய்வாளர்,*

நெறியாளர்: முனைவர்ஜோ.பென்னி,

*தமிழ்த்துறை, தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில் -02.*

**ஆய்வுச்சுருக்கம்**

இயற்கையையும் மனிதவாழ்க்கையும் பிரிக்க முடியாதது. ஏனெனில் இயற்கையின் கருவிலிருந்து தான் மனிதவாழ்வின் சாராம்சம் ஆரம்பமாகிறது. சங்க இலக்கிய இயற்கைப் புனைவுகளில் இடம் பெற்றுள்ள கூறுகளில் ஒன்று அக்காலத்தின் மலர்களின் பெயர்கள். அது மட்டு மின்றி சங்க இலக்கியத்தின் முக்கிய நூல்களில் ஒன்று குறிஞ்சிப்பாட்டு. குறிஞ்சிப்பாட்டில் 99 மலர்கள் குறித்த குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் முக்கியமான மலர் பீர்க்கம்மலர். பீர்க்கம் கொடிமுள் வேலிகளில் படர்ந்து காணப்படும். மழைக்காலத்தில் தலைவியைத்தலைவன் திருமணம் செய்வதாக கூறிப்பிரிகின்றான். மழைக்காலமான பீர்க்கம்பூக்கள் மலரும் காலம் வந்ததால் தலைவன் திருமணம் செய்து கொள்ளும் காலம் வந்ததாக கூறித் தோழித் தலைவியை ஆற்றுப்படுத்துகிறாள். பீர்க்கம்பூ மஞ்சள் நிறம் கொண்டது. தலைவிக்குப்பசலை நோய் தோன்றும் போது நெற்றியில் பீர்க்கம்பூ வின்மஞ்சள் நிறம் தோன்றும். தலைவனைத் தலைவி பிரிந்திருக்கும் போது உடல் மெலிந்து பீர்க்கம்பூ வின் நிறம் உடலில் பரவும். மேற் கண்டவாறு புலவர்கள் தங்கள் திறனைப்பயன்படுத்தி பீர்க்கம்பூ வினைமனிதவாழ்வோடு தொடர்பு படுத்தி இலக்கியம் படைத்துள்ளனர்.

**முன்னுரை**

இலக்கியங்களைப்பாடும் கவிஞர்கள் இயற்கையினைப்பாட தவறுவதில்லை. இயற்கையின்சாரல் இலக்கியத்தில் இல்லையெனில் இலக்கியப்படைப்பும் முழுமை அடைவதில்லை. அந்தவகையில் சங்ககால இலக்கியங்கள் அக்காலத்தின் இயற்கைச் சூழலைத்தன்னகத்தே கொண்டு படைக்கப்பட்டுள்ளது. அக்காலபுலவர்கள் உற்று நோக்கிய இயற்கையிலுள்ள செடி, கொடிகள், புல்பூண்டுகளைப் பற்றி கூட இலக்கியங்களில் பாடத்தவறவில்லை. அந்தவரிசையில் பூக்களும் இலக்கியத்தில் இடம் பெறுகின்றன. சங்க இலக்கியத்தின் பிறநூல்களில் தூவலாகதூவப்பட்ட பூக்கள் குறிஞ்சிப்பாட்டில் குவியலாககபிலரின் எழுத்துதிறனால் குவித்துவைக்கப்பட்டுள்ளன. அத்தகையப்பூத் தொகுதியில் இடம் பெற்றுள்ள பீர்க்கம்பூ பற்றியும் புலவர்களின் பார்வையில் பீர்க்கம்பூ எடுத்தாளப்பட்டுள்ள விதம்பற்றியும் இவ்வாய்வு கட்டுரைவிளக்கும் வகையில் அமைகிறது.

**சங்க இலக்கியத்தில் குறிஞ்சிப்பாட்டு**

சங்க இலக்கியத்தொகுப்பில் ஒருநூல் குறிஞ்சிப்பாட்டு. இதனைப் ‘பெருங்குறிஞ்சி’ எனவும் கூறுவர். இந்நூல் மொத்தம் 261 அடிகள் கொண்டுகபிலரால் இயற்றப்பட்டுள்ளது. இப்பாடல் தொகுப்பு அகத்திணைக்கூறில் ஆசிரியப்பாவினால் அமைக்கப்பட்டுள்ளது. ஆரிய அரசன் பிரகதத்தன் தமிழரின்களவு

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2025, IRJTSR

நெறித்தீது என்றுரைத்தான். அவனுக்குகளவு நெறிக்கற்பு நெறியில் தான் முடியும் என்றுகற்பிக்கும் நோக்கில் கபிலர் குறிஞ்சிப்பாட்டை இயற்றினார். குறிஞ்சிப்பாட்டில் 99 மலர்களைமகளிர்குவித்துவைத்துவிளையாடியசெய்திகள்இடம்பெற்றுள்ளன.அதில்ஒருபூவேபீர்க்கம்பூவாகும்.குறிஞ்சிப்பாட்டில்பீர்க்கம்பூஇடம்பெற்றதை,

**"பாரம்பீரம்பைங்குருக்கத்தி"**

**(குறிஞ்சிப்பாட்டு,வரி -92)**

எனும்வரிஎடுத்துரைக்கிறது.பீர்க்கம்பூவின்இளம்(பிள்ளை) பெயர்பீர்என்பதை,

**"பீர்என்கிளவிஅம்மொடுஞ்சிவனும் "**

**(தொல்எழுத்து:366)**

எனும்நூற்பாவரிசுட்டிக்காட்டுகிறது

**பீர்க்கம்பூ**

பீர்க்குஎன்பதுகொடிவகைத்தாவரமாகும்.இதுகாட்டுபீர்க்கு,உணவுபீர்க்குஎனஇருவகைப்படும்.உணவுபீர்க்குஇளம்காய்நிலையில்உணவிற்காகபயன்படுத்தப்படுகிறது.முற்றியகாய்காய்ந்தபின்தோல்உரித்தால்உட்பகுதியில்விதைகளால்ஆனநாராககாட்சியளிக்கும்.அந்தநார்பகுதிகுளிக்கும்போதுஉடலில்உள்ளஅழுக்குகளைநீக்கபயன்படுத்தப்படுகிறது.கார்காலத்தில்பீர்க்குபூக்கஆரம்பிக்கும்.கூதிர்காலத்தில்(ஐப்பசி,கார்த்திகை)மிகுதியானபூக்கள்பூக்கும்.மாலைவேளையில்பூக்கள்விரியும்.பூக்கள்மஞ்சள்நிறத்தில்வாசனைஅற்றுகாணப்படும்.

**தும்பிசேர்கீரனார்பார்வையில்பீர்க்கம்பூ**

நற்றிணையில் 277-வதுபாடலைத்தும்பிசேர்கீரனார்எனும்புலவர்எழுதியுள்ளார்.அப்பாடலில்தலைவன்மீதுதலைவிதீராதகாதல்கொண்டுள்ளாள்.அத்தகையதலைவியைவிட்டுதலைவன்மலைகாட்டுவழியாகபொருள்வயிற்பிரிந்துசென்றுள்ளான்.தலைவனின்பிரிவைத்தாங்கமுடியாததலைவிதவிக்கிறாள்.அவள்வீட்டுமுள்வேலியில்பீர்க்கம்செடிபடர்ந்துபூக்கள்விரிந்துள்ளது.அதிலுள்ளமகரந்தத்தூளைவண்டானதுநீக்கிவிட்டுதேனைவிரும்பிஉண்கிறது.அதுபோலதன்னுடையபசலைநோயைநீக்கும்பொருட்டுதான்தலைவன்மீதுகொண்டுள்ளஅன்பினைத்தலைவனுக்குஎடுத்துரைக்கதூதுசெல்லும்படிகூறுகிறாள். அதனை,

**"மனைப்புறங்காக்கும்மாண்பெருங்கிடக்கை**
**நுண்முள்வேலித்தாதொடுபொதுளிய**
**தாறுபடுபீரம்ஊதிவேறுபட்ட**
**நாற்றம்இன்மையிற்பசலைஊதாய்"...**

**(நற்றிணை, பா-277;2-8)**

என்னும்பாடல்வரிகள்வாயிலாகஅறிந்துகொள்ளமுடிகிறதுஇதிலிருந்துபீர்க்கம்செடிமுள்வேலிகளில்படரும்.பூக்களில்அதிகதேனும்,மகரந்ததூளும்காணப்படும்என்பதைத்தெரிந்துகொள்ளமுடிகிறது.

**நக்கீரர்பார்வையில்பீர்க்கம்பூ**

மழைக்காலத்தில்தலைவியைத்திருமணம்செய்வேன்எனகூறிபிரிந்ததலைவன்வராதகாரணத்தால்தலைவியின்உடல்மெலிந்துபசலைநோய்ஏற்பட்டுவளையல்கள்நழுவியது.கண்கள்பனியைக்கொட்டியது.பசலைநோயின்காரணமாகநெற்றியில்பீர்க்கம்பூவைப்போன்றமஞ்சள்நிறபசப்புதோன்றியது.அதனைக்கண்டதோழிதலைவியின்நிலையைஅறிந்துகொள்கிறாள்.வருத்தப்படும்தலைவியைஆற்றுவிக்கும்பொருட்டு,வெகுவிரைவில்வண்டுகள்மெய்க்கக்கூடியபுதுமலர்களைநீசூடுவாய்.கைகளில்பொன்வளையல்களைஅணிவாய். திருமணத்தில்முரசுபோலகொட்டும்இடிமுழக்கம்தலைவனின்நாட்டில்கேட்கிறது. மழைக்காலத்தில்தலைவன்திருமணம்செய்வதாககூறியநேரம்வந்துவிட்டதுஎனதலைவியைத்தோழிஆற்றுப்படுத்துகிறாள்.

**“தோலேதொடிநெகிழ்ந்தனவேநுதலே**
**பீரிவர்மலரிற்பசப்பூர்ந்தன்றே**
**கண்ணும்தண்பனிவைகின்”...**

**(நற்றிணை, பா-197;1-3)**

மேற்கண்டபாடல்வரிகள்அதனைஉணர்த்திநிற்கின்றன.சங்ககாலத்தில்காதல்நோயினால்வருத்தப்படக்கூடியதலைவிக்குப்பசலைநோய்தோன்றுவதாகசங்கஇலக்கியங்களின்பலபாடல்கள்எடுத்துரைக்கின்றன.அதற்கு,

**“பீர்க்கம்மலர்காதலர்பிரிவால்வாடும், துயரடையும்தலைவியின்உடலில்படர்ந்தபசலைக்குஉவமையாகவந்ததன்காரணமாகவேசிறப்புப்பெற்றதுஎனலாம்”. (பொ. திராவிடமணி,பக்-9)**

என்றஆய்வுகட்டுரைவரிகளும்சான்றுபகர்கிறது.அத்தகையபசலைநோயினைஉருவகப்படுத்தும்போதுபீர்க்கம்பூவின்நிறமானமஞ்சள்நிறம்தலைவியின்நெற்றியில்தோன்றுவதாகபுலவர்பாடியுள்ளதைத்தெரிந்துகொள்ளமுடிகிறது.

**ஓதலாந்தையார்பார்வையில்பீர்க்கம்பூ**

ஓதலாந்தையார்ஐங்குறுநூற்றில்தலைவன்தலைவியைவிட்டுபொருள்வயிற்பிரிந்துள்ளான்.அதனால்தலைவிஏக்கமடைந்துஅவள்உடலில்பீர்க்கம்பூபோன்றமஞ்சள்நிறம்படர்கிறதுஎனபுலவர்எடுத்துரைப்பதை,

**“கண்எனக்கருவிளைமலர, பொன்என**
**இவர்கொடிப்பீரம்இரும்புதல்மலரும்”**

**(ஐங்குறுநூறு, பா:464;1-2)**

எனும்பாடல்வரிகள்வாயிலாகஅறிந்துகொள்ளமுடிகிறது.தலைவரின்பிரிவினால்தலைவிக்குஏற்படும்உடல்வாட்டத்தினைப்பீர்க்கம்பூவின்மஞ்சள்நிறம்உடலில்படர்வதாகபுலவர்சுட்டிக்காட்டிபாடியிருப்பதுபுலவரின்கற்பனைத்திறனைவெளிப்படுத்துகிறது.

**முடிவுரை**

பீர்க்கம்கொடியானதுபாழ்நிலத்தில்மற்றும்முள்வேலிகளில்படரும்.பீர்க்கம்பூக்கள்மஞ்சள்நிறத்தில்பொன்போன்றுகாட்சியளிக்கும்.பீர்க்கம்பூவில்நிறையமகரந்தத்தூள்காணப்படும்.பூக்கள்மணமற்றவைமற்றும்பீர்க்கம்பூவில்நிறையதேன்நிறைந்திருக்கும்.சங்ககாலத்தில்இயற்கையைஉற்றுநோக்கியபுலவர்கள்பீர்க்கம்பூவினைத்தங்கள்பாடல்களில்பலவிதங்களில்எடுத்தாழ்ந்துள்ளனர்.குறிப்பாகஆண்பெண்உறவில்ஏற்படும்பி

ரிவினால்பெண்களுக்குப்பசலைநோய்தோன்றும்.அந்நோயினைவெளிப்படுத்தும்அறிகுறியாகபீர்க்கம்பூவின்நிறத்தைஉருவகப்படுத்தியுள்ளனர்.

**துணைநூற்பட்டியல்**


[1] ஔவை. துரைசாமிபிள்ளை, நற்றிணைமூலமும்உரையும், சாரதாபதிப்பகம், முதற்பதிப்பு 2016.

[2]ஔவை. துரைசாமிபிள்ளை,ஐங்குறுநூறுமூலமும்விளக்கஉரையும்,அண்ணாமலைபல்கலைக்கழகவெளியீடு,முதல்பதிப்பு 1957.

[3] நித்தியாஅறவேந்தன்,குறிஞ்சிப்பாட்டுஉரைவேறுபாடு,நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ் (பி) லிட், முதற்பதிப்பு 2024.

[4]திராவிடமணி.பொ,தமிழ்இலக்கியங்களில்பீர்க்கம்பூ,தமிழ்பண்பாடுமற்றும்இலக்கியஆய்விதழ், வெளியீடு30.7.2024.

[5] இளம்பூரணர்(உ.ஆ), தொல்காப்பியம்எழுத்ததிகாரம்,சாரதாபதிப்பகம்,சென்னை.